**செய்தி வெளியீடு எண்:332** **நாள்: 07.06.2012**

## செய்தி வெளியீடு

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திற்குள் 1844–ஆம் ஆண்டு கட்டப்பட்டு புராதனச் சின்னமாக விளங்கும் கலங்கரை விளக்கம் கவனிப்பாரின்றி கிடப்பதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து, உடனடியாக, அதனை பராமரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிட்டார்கள்.

கப்பல்களுக்கு வழிகாட்டும் வண்ணம் 1844–ஆம் ஆண்டு கலங்கரை விளக்கம் ஒன்று சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டது. இதனை பராமரிக்கும் பணியினை, 1977–ஆம் ஆண்டு, காமராஜர் சாலையில் கலங்கரை விளக்கம் அமைக்கும் வரை, மத்திய அரசு மேற்கொண்டு வந்தது. பின்னர், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள கலங்கரை விளக்கம் பயன்படுத்தப்படாததால், பராமரிப்புப் பணியினை மத்திய அரசு கைவிட்டு விட்டது.

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள கட்டுமான அமைப்புகளை பராமரிப்பது, புதுப்பிப்பது ஆகிய பணிகள், உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. பி. ஜோதிமணி அவர்கள் தலைமையில் இயங்கும் கட்டடக் குழுவின் ஒப்புதலுக்குப் பிறகே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நூறாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு புராதனச் சின்னமாக விளங்கும் கலங்கரை விளக்கத்தினை பராமரிப்பதற்கான நடவடிக்கைகளை சென்னை உயர் நீதிமன்ற கட்டடக் குழுவின் ஒப்புதல் பெற்று உடனடியாக எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9
நாள் : 7.6.2012